# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,821 — 1930 ம் ஹு மார்கழிமீ 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

நான் இத்தால் பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறதாவது, ஹவலக் ரோட்டு வளைவை நிவிர்த்துகிறதாகிய ஒரு பகிரங்கதேள்வைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்காக; 1930 ம் ஆண்டு டிசெம்பர்மீ 5 ந் திகதி 7,887 ம் இலக்க கவண்மென்ற் கஜெற் பத்திரிகை 1523 ம் பக்கத்தில் பிரசித்தம் பண்ணப்பட்ட 1931 ம் ஆண்டு ஜனவரிமீ 14 ந் திகதி காலை 10 மணிக்கு நியமிக்கப்பட்ட விசாரணை, 1931 ம் ஆண்டு பெப்ருவரிமீ 5 ந் திகதி, வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தவணை போடப்பட்டிருக்கிறது.

பிரதமபடத்து இலக்கம் 20,035. கிதிலப்பொனை கிழக்கு,

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஹவலக் ரோட்டு 591 ம் நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணி | தென்னந்தோட்டம், 60 வருஷ 7 தென்ன மரங்களும், 8 வருஷ 7 கமுகமரங்களும், 6 வருஷ 1 பலாமரமும், கற்சுவரின் பகுதியுமுளது | டி. ஜே. விஜயரத்தின | 0 | 0 | 7·5 |

நகரசங்க கந்தோர்,
கொழும்பு 1930 ம் ஆண்டு டிசம்பர்மீ 23 ந் திகதி.

எச். ஈ. நியுன்ஹம்,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகரதிகாரியும்.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் திக்கில்லகாஸ்கொடவில் ஓர் பகிரங்க கக்கூசும் அதற்குப் போகும் ஓர் ரோட்டும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 8,953. குறிச்சி—திக்கிலாஸ்கொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கப்புகாஸ்டெனியதோட்டம் .. | ஓர் கக்கூஸ் கொண்ட வெண்நிலம் | பொறமடுலவைச்சேர்ந்த சைமன் வேர் ணண்டோ | 0 | 0 | 1·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்றசகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹு தை மாசம் 28 ந் தேதியிலன்று $10\frac{1}{2}$ மணிக்கு கன்குருன்கெற்ற வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1930 ம் ஹு மார்கழிமீ 16 ந் உ.

டபிள்யு. ஈ. ஹெரப்டே,
உதவி அரசாட்சி ஏசண்டு.

777——J. N. 2239-139 (12/30

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிராமக் காட்டாய் பிரசித்தம் செய்யப்படும் துண்டுகளுக்கு அதாவது கிராமப் பிளான் 96 ல் 2BC, 2A, 2B, 2C, 2BB[1], 2BB என்னும் இலக்கங்கொண்ட காணித்துண்டுகளுக்கு போக்குவரவுக்கு ஒரு பாதை விடுகிறதென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

கிராமப்பிளான் இலக்கம் 96 ல் 1 ம் பிரிவு. குறிச்சி—இறம்மலகாறே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 5C | கொஸ்ககாவத்தை .. | தோட்டம் .. | மாதம்பையிலிருக்கும் இ. எ. டபிள்யு. அபே இரதனை | 0 | 0 | 19 |
| 6A | ககற்றககாகும்புரு .. | நெல்வயல் .. | ஆர். கெறற்காமி, ஆர். கண்டப்பு, ஆர். மெனிக்கிருலா, முதலியார் அபேஇரத்ன | 0 | 0 | 34·7 |
| 6B | கொஸ்ககாவத்தை .. | வெண்நிலம் .. | மாதம்பையிலிருக்கும் இ. எ. டபிள்யு. அபே இரத்ன | 0 | 0 | 1 |
| 6C | றுகாககும்புரு .. | நெல்வயல் .. | ஆர். றங்காமி, ஆர். கெறற்காமி, ஆர். மாணிக்காமி | 0 | 0 | 4·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹூ மாசி மாசம் 26 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு சிலாபக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது

புத்தளம் கச்சேரி,
1930 ம் ஹூ மார்கழி …

டபிள்யு. ஜே. எல். ரூஜேர்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන මධ්‍යස්ථානය

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.